**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | |
|---|---|
| Case No. | : CC No.768/2025 |
| Deposition of witness for Prosecution | : P.W– 3 |
| Name | : கார்த்திக் ராஜா, வயது 21 |
| Father Name/Husband Name | : ராமமூர்த்தி |
| Village | : வடக்கு திட்டங்குளம் |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : கேட்டரிங் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of June 2026.

**(A1, A2 present)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது வடக்கு திட்டங்குளத்தில் வசித்து கேட்டரிங் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்துகள் என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் 02.08.2025 அன்று மதியம் 02.00 மணியளவில் கோவில்பட்டி, திட்டங்குளம், பூந்தோட்ட காலனியில் உள்ள கனகராஜ் வீட்டின் அருகே நானும், வள்ளிக்கண்ணன் என்பவரும் அங்கே நடந்த சண்டை சம்பந்தமாக போலீசார் வரைப்படம் வரைந்து மதியம் சுமார் 04.00 மணியளவில் அந்த இடத்தில் இரும்பு கம்பி ஒன்றை எங்கள் முன்னிலையில் போலீசார் கைப்பற்றினார்கள். அதற்கு சாட்சியாக நாங்கள் இருவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகவும், அத்தாட்சியில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை எனக்கு கொஞ்ச வருடங்களாக தெரியும், அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை அளித்த விவரம் எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் எனது நண்பர்கள் என்பதால் அவர்களை காண நான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் முதலில் கையொப்பம் செய்யும்போது என் முன்பு எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அதன் பின்பு ஒரு மணி நேரம் கழித்து போலீசார் ஒரு கம்பியை கண்டுபிடித்து வைத்துள்ளதாகவும், கையொப்பம் செய்ய வருமாறு என்னை அழைத்ததால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த கம்பியை எங்கிருந்து எடுத்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னவைகள் அனைத்தும் பொய்யனாது என்றாலும், அ.சா.1, எனது நண்பர் என்பதால் அவருக்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.